# பெரிய புராணத்தில் வெளிப்படும் வாழ்வியல் சடங்கு முறைகள்: ஓர் ஆய்வு

M.S.F Rusdha [1] and R.Baby Shalini[2]

[1,2] *Department of Languages, South Eastern University of Srilanka*
rusdhasamees@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

ஒரு நாட்டின் சமுதாயச் சூழல், அரசியல் பொருளாதாரச் சூழல், புலவர்களின் புலமைத்திறன், புலமை வேட்கை, மக்களின் மனப்போக்கு, மக்களின் சுவையுணர்வு முதலிய பல்வேறு காரணிகளால் காலந்தோறும் பல்வேறு இலக்கியங்கள் தோன்றி வளர்ந்து வருகின்றன. அவ்வாறு காணப்படும் இலக்கியங்களை அவற்றின் பொருண்மை, யாப்பு, அமைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் பல்வேறு நிலைகளில் வகைப்படுத்துவர். இவற்றினை இலக்கிய வகைகள் என்பர். இவ்வகையில் தமிழ் மொழியிலும் பல்வேறு இலக்கிய வகைகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்றே பக்தி இலக்கிய வகை. பக்தி இயக்கத்தின் விளைவாகத் தோன்றியதே பக்தி இலக்கியம். இறைவனின் பெருமைகளையும் இறையனுபவங்களையும் கூறும் இலக்கியங்கள் அனைத்தும் பக்தி இலக்கியம் என்று அழைக்கப்படும். தமிழ் இலக்கிய உலகில் பன்னிரு திருமுறைகளையும் நாலாயிரத்திவ்ய பிரபந்தங்களையும் மட்டும் பக்தி இலக்கியம் எனக் கூறும் மரபு உள்ளது. பக்தி இலக்கியங்கள் தமிழ் மொழிக்கு இலக்கணம் கூறுவதோடு மட்டும் அமையாது தமிழர் தம் வாழ்க்கைக்கு இலக்கணம் கூறும் நூலாக தொல்காப்பியர் காலத்திலும் அதற்கு முன்பும் கூட காணப்பட்டன எனக் கருத முடிகின்றது. இவை மூலம் மக்களிடையே வேதம் ஓதுதல், வேதச் சடங்குகள் செய்தல், வேள்விகள் செய்தல் முதலிய வைதீக நெறிமுறைகள் காணப்பட்டமை மற்றும் வைதீக சமயம் பற்றியும் அறிய முடிகின்றது. பக்தி இலக்கியங்களில் காணப்படுகின்ற பாடல்களின் மூலம் எடுத்துரைக்கப்படுகின்ற மனிதனது வாழ்க்கையில் மேற்கொள்ளப்படுகின்ற சடங்குமுறைகள் பற்றி விளக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது. பக்தி இலக்கியங்கள் பெரும்பாலும் இறைவனது குணவியல்புகள், அவரது திருக்கோலம், அவரது அருட்திறம், உலகின் நிலையான பொருட்கள், உலகின் நிலையற்ற பொருட்கள், ஆலய வழிபாட்டின் சிறப்பு, ஆன்ம ஈடேற்றம் போன்றவற்றினைப் பற்றி மக்களுக்கு தெளிவுபடுத்த எழுந்த நூல்களாகும். இத்தகைய பக்தி இலக்கியங்களில் சைவசமயம் தொடர்பான கோட்பாடுகளை விளகுகின்றனவற்றை திருமுறைகள் எனச்சுட்டுவர். இத்திருமுறைகளில் ஒன்றாகவே பெரியபுராணம் காணப்படுகின்றது. சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையை முல்நூலாகவும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியை வழிநூலாகவும் கொண்டு பெரிய புராணம் சேக்கிழாரால் படைக்கப்பட்டது. இறைவனையும் இறையடியார்களையும் போற்றுகின்ற இப்பெரியபுராணத்தில் மனிதனது வாழ்வியல் சடங்கு முறைகள் பற்றிப் பேசப்படுகின்றன என்பதே இவ்வாய்வின் பிரச்சினையாக அமைகின்றது. பக்தி இலக்கியங்கள் குறித்துப் பல ஆய்வுகள் எழுந்த போதிலும் பெரியபுராணம் கூறுகின்ற வாழ்வியல் சடங்கு முறைகள் பற்றி இதுவரை ஆராயப்படவில்லை எனும் ஆய்வு இடைவெளியை அடிப்படையாகக்கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. பெரிய புராணத்தில் வெளிப்படுத்தப்படும் சிந்தனைகளை அடையாளம் காண்பதோடு அவ்விலக்கியப் பாடல்களினூடாக அக்காலச்சூழலில் சடங்குமுறைகள் எவ்வகையில் நடைபெற்றன என்பதனையும் அவை பெற்றிருந்த முக்கியத்துவத்தினையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கங்களாக அமைகின்றன. இவ்வாய்வானது ஒரு பண்புசார் ஆய்வாக அமைகின்றது. இவ்வாய்விற்கு தரவு சேகரிப்பு முறைகளாக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சேக்கிழாரால் இயற்றப்பட்ட பெரியபுராணம் மற்றும் பக்தி இலக்கியங்கள் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள், சஞ்சிகைகள், ஏனைய நூல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும் இவ்வாய்வின் மூலம் வாழ்வியல் சடங்கு முறைகளுக்கு நாயன்மார்கள் அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதையும் அவர்களால் இயற்றப்பட்ட இலக்கியங்களில் அத்தகைய வாழ்வியல் சடங்கு முறைகள் குறித்து பெரிதும் பேசப்பட்டுள்ளன என்பதையும் எம்மால் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**திறவுச்சொற்கள்:** *பக்தி இலக்கியம், சடங்கு முறைகள், நாயன்மார்கள், ஆழ்வார்கள்*

**ஆய்வு அறிமுகம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி நெறிக்காலம் எனப் போற்றப்படுவது பல்லவர் காலமாகும். இப் பல்லவ மன்னர்கள் காஞ்சியைத் தாலைநகராகக் கொண்டு தொண்டை நாட்டுடன் தமிழ் நாட்டின் பல பிரதேசங்களை இணைத்து ஆட்சி செய்தவர்களாக விளங்கினர். இக்காலத்திலேயே அதிகளவான பக்தி இலக்கியங்கள் தோற்றம் பெற்றன.

சங்க காலத்திலும் சங்கமருவிய கால பிற்பகுதியிலும் பல்லவர் கால ஆரம்பப் பகுதியிலும் அவைதீக சமயங்களது எழுச்சியினால் இந்து சமயத்தினை வளர்க்கும் பொருட்டு கி.பி 5ஆம் நூற்றாண்டளவில் நாயன்மார்களுள் ஒருவரான காரைக்காலம்மையாரும் பன்னிரு ஆழ்வார்களுள் முதல் மூன்று ஆழ்வார்களும் தோற்றம் பெற்று தமது பக்தி உணர்வினை இலக்கியங்கள் ஊடாக வெளிப்படுத்தினர். அக்காலத்தில் நிலவிய அரசியல், சமுதாயச் சூழல்களால் பிற இனத்தவர் தமிழ் மண்ணில் ஆட்சி செய்யும் நிலை ஏற்பட்டது. களப்பிரர்கள் தமிழகத்தின்மீது படையெடுத்து வந்து தமிழகத்தைக் கைப்பற்றினர். சமணர்கள் அளித்த இலவசக் கல்வி, இலவச மருத்துவம், மக்களிடையே வேற்றுமை பாராட்டாமை, தமிழ்மொழிப் பற்று, மன்னர்களின் ஆதரவு ஆகியவற்றால் மக்கள் சமண சமயத்தை ஆதரித்தனர். சங்களமருவிய காலத்தில் சைவம், வைணவம், வைதீகம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் காணப்பெற்றன. இச்சமயங்கள் மக்களிடையே செல்வாக்குப் பெற போட்டியிட்டன. பக்தி இலக்கியம் மூலம் இத்தகைய சமயப் பூசல்களை அறிய முடிகின்றது.

களப்பிரர்களைப் போலவே பல்லவர்களும் தமிழகம் வந்தனர். இக்காலச் சூழலில் தமிழகம் மனித மைய ஈர்ப்புச் சூழலிலிருந்து சமய மைய ஈர்ப்புச் சூழலுக்கு மாறத் தொடங்கியது. சங்கமருவிய காலப்பகுதியில் தமிழகத்தில் சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெறத் தொடங்கின. இச்சமயங்களை ஏற்றுக் கொள்வதற்குரிய சூழலும் சங்கமருவிய காலத்தில் காணப்பட்டது. இச்சூழலில் சமண பௌத்த சமயக் கருத்துக்கள் அம்மக்களின் வாழ்க்கை முறைக்கு வழிகாட்டுவனவாய் அமைந்தன.

போர், மது அருந்துதல், ஊன் உண்ணல் போன்றவற்றால் மனம் சலிப்படைந்திருந்த மக்களுக்குச் சமண பௌத்த சமயக் கருத்துக்கள் அறிவுறுத்திய ஊன் உண்ணாமை, மது அருந்தாமை, அமைதி, ஒற்றுமை, ஒழுக்கம் போன்ற கொள்கைகள் மகிழ்வளிப்பனவாய் அமைந்தன.

இத்தகைய சமயச் சூழலில் சைவமும், வைணவமும் இணைந்து பக்தி இயக்கத்தினை உருவாக்கின. சைவம், வைணவம், சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் தத்தம் செல்வாக்கினை பெருக்க முயன்ற போட்டியில் வைதீக சமயங்கள் செல்வாக்குக் குன்றின. எனவே வைதீக சமயங்களை எழுச்சி பெறச் செய்வதற்கு சைவ நாயன்மார்கள் மற்றும் ஆழ்வார்கள் இறைவனது அருட்திறங்கள், திருக்கோலக்காட்சி, பெருமைகளை வடமொழி நூல்களைக் (வேதம், புராணம், இதிகாசம்) கையாண்டு பக்தியின் ஆழத்தினை வெளிப்படுத்தினர். இப்பக்தி இலக்கியத்தினுள் அடங்குபவையே திருமுறைகள்.

திருஞான சம்பந்தர் பாடிய ஆராய பதிகங்கள் முதல், இரண்டாம், மூன்றாம் திருமுறைகள் ஆகும். திருநாவுக்கரசர் பாடிய பதிகங்கள் நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் ஆகும். சுந்தரர் பாடியவை ஏழாம் திருமுறையாக வைக்கப்பெற்றுள்ளன. மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகமும் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாகும். கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகடா நம்பி, கண்டராதித்தர், வேணாட்டிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆகியோர் பாடிய பாடல்கள் ஒன்பதாம் திருமுறை எனப்படுகின்றது. திருமூலரின் திருமந்திரம் பத்தாம் திருமுறையாகக் கருதப்பெறுகின்றது. திருவாலவுடையார், காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், சேரமான் பெருமாள், நக்கீர தேவநாயனார், கல்லாட தேவநாயனார், பரணதேவ நாயனார், இளம் பெருமாள் அடிகள், அதிராவடிகள், பட்டினத்துப்பிள்ளையார், நம்பியாண்டார் ஆகியோரின் பாடல்கள் பதினொறாம் திருமுறையாகவும் சேக்கிழாரின் பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறையாகவும் காணப்படுகின்றன.

இத்தகைய பக்தி இலக்கியங்களில் வெளிப்படுத்தப்படும் மனிதன் தன் வாழ்வில் செய்கின்ற சடங்கு முறைகள் குறித்து ஆராய்வதாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

**இலக்கிய மீளாய்வு**

குறித்த ஆய்வினை தெளிவுபடுத்தும் வகையிலும் அதனுடன் தொடர்புபட்ட அறிவினைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனும் ஆய்வுத் தலைப்பிற்குப் பொருத்தமான நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள் மீளாய்வு செய்யப்பட்டன.

கந்தசாமியால் எழுதப்பட்ட ''தமிழும் தத்துவமும்'' (1976) எனும் நூலில் பக்தி இலக்கியங்கள் மற்றும் அதன் தோற்றப் பின்னணி குறித்து விளக்கப்பட்டுள்ளது.

சிவத்தம்பியின் ''தமிழ் இலக்கியத்தில் மதமும் மானிடமும்'' (1789) எனும் நூலில் பக்தி இலக்கியங்களில் சமய தத்துவங்கள் மற்றும் மனிதனுக்கும் சமயத்திற்கும் இடையிலான தொடர்புகள் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தட்சணாமூர்த்தியின் ''தமிழர் நாகரிகமும் பண்பாடும்'' (1981) எனும் நூலில் தமிழ் சமய வரலாறு மற்றும் அவர்களால் பின்பற்றப்படுகின்ற பண்பாட்டு அம்சங்கள் பற்றி விளக்கப்பட்டுள்ளன.

வெள்ளைவாரணனின் ''சங்க இலக்கியத்தில் சமய நோக்கு'' (1984) எனும் கட்டுரையில் வைதிக சமயங்கள் பற்றியும் அவை சார்ந்து பிற்காலத்தில் தோற்றம் பெற்ற பக்தி இலக்கியங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன.

குன்றக்குடி அடிகளாரின் ''நமது நிலையில் சமயம் சமுதாயம்'' (1974) எனும் நூலில் சமயம் பற்றியும் சமயத்தினை அடிப்படையாகக் கொண்டு சமுதாயத்தில் மேற்கொள்ளப்படுகின்ற பண்பாட்டு அம்சங்கள் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டுள்ள.

மேற்குறிப்பிட்டவைகள் இவ்வாய்விற்கான இலக்கிய மீளாய்வுகளாக அமைகின்றன.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வில் சமூகவியல், மொழியியல், ஒப்பியல், விளக்கமுறை அணுகுமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இது ஒரு பண்புசார் ஆய்வாகும்.

**தரவு சேகரித்தல்**

இவ்வாய்விற்கு தரவு சேகரிப்பு முறையாக இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. நாயன்மார்களால் அருளப்பட்ட பக்தி இலக்கியங்கள் மற்றும் தொடர்பாக வெளிவந்த கட்டுரைகள், சஞ்சிகைகள், ஏனைய நூல்கள் போன்றன பயன்படுத்தப்பட்டுள்ளன.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும்**

**திருமுறைகள்**

திருமுறை என்ற பெயரின் பொருள் தெய்வத்தன்மையும் அழகும் பொருட்செல்வமும் நிறைந்த பனுவல் என்பதாகும். அதாவது முறை என்றால் தோத்திரம் என்று பொருள். தோத்திரப் பாடல்களைக் கொண்ட பனுவல். முறை என்றால் ஒழுங்கு, நீதி, அறம் என்றும் பொருள்படும். வாழ்வியலுக்குப் பயன்படும் அறங்களை, ஒழுங்குகளை, நீதிகளைக் கூறும் பனுவல் என்றெல்லாம் விளக்கங்கள் அழிக்க முடியும். இத்திருமுறைகள் சங்க இலக்கியங்களைப் போன்று மூல இலக்கியங்களாகத் திகழ்கின்றமை, அக்காலச் சமுதாய வரலாற்றை அறிய துணை நிற்கின்றமை, பல்வேறு ஊர்கள் மற்றும் இனங்களைச்

சார்ந்தவர்களால் பாடப்பெற்றமை, இசை, ஓவியம், சிற்பம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்கு உறுதுணையாகின்றமை, இலக்கியத்தரத்தில் உயர்ந்து நிற்கின்றமை, பல புதிய இலக்கிய வகைகளைத் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகப்படுத்தியுள்ளமை, தமிழ்ப் பண்பாட்டை பறை சாற்றுகின்றமை, சமத்துவச் சிந்தனைகளை வலியுறுத்துகின்றமை, பல புதிய பா, யாப்பு, வகைகளை அறிமுகம் செய்கின்றமை, சிறந்த வாழ்வியல் நூலாக அமைகின்றமை, பல வரலாற்றுச் சான்றுகளைக் கொண்டுள்ளமை முதலான பல்வேறு சிறப்புக்களினைக் கொண்டு திகழ்வதனைக் காணமுடிகின்றது.

இத்திருமுறைத் தொகுப்பில் பெரியபுராணமும் ஒன்றாகத் திகழ்கின்றது. ''செயற்கு அரிய செய்வர் பெரியார்'' என்னும் குறள் வரிக்கேற்ப அறுபத்து மூன்று நாயன்மார்கள் புரிந்த இறைப் பக்தியையும், தொண்டு நெறியையும் வரலாற்று முறையில் கூறும் நூலாக காணப்படுகின்றது.இதில் 63 அடியார்களது பெருமக்களையும் மையமாகக் கொண்டு திகழ்கின்றது. இந்நூல் பெரும்பிரிவுகளாக இரண்டு காண்டங்களையும், உட்பிரிவாக 13 சருக்கங்களையும் உடையது. 4286 விருத்தப்பாக்களையுடைய ஒரு பெரு நூலாகும்.

**சடங்குகள்**

சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வரன்முறை ஆகும். மனிதனும் மனித சமூகமும் வாழ்க்கையை நெறிப்படுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கம் எனவும் கூறலாம். புனிதத் தன்மையின்பால் மக்கள் மேற்கொள்ளும் நடத்தைக் கோலங்களின் தொகுப்பே சடங்கு என்றும் நம்பிக்கைகளின் அடிப்படையில் மக்களால் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் புனிதச் செயல்களே சடங்குகள் என்றும் சடங்கு குறித்து பல்வேறு விளக்கங்களை முன்வைக்கலாம். அந்தவகையில், சடங்கு என்பது புனிதத்துவம் கருதி ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையுடன் குறியீட்டு நிலையில் மக்களால் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடு என்பதனைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

மனிதன் தோன்றிய காலமே சடங்குகளும் தோற்றம் பெற்றுவிட்டன என்று தான் கூற வேண்டும். ஏனெனில் சடங்குகள் மனித மனத்தின் வெளிப்பாடாகும். தொடக்க கால இனக்குழுச் சமூகத்தில் சடங்குகளே வாழ்க்கையாகவும் வாழ்க்கையே சடங்குகளாகவும் இருந்தன. வேட்டைக்குச் செல்லும் முன் வேட்டைச் சடங்கு நிகழ்த்திச் சென்றதாக அறியப்படுகிறது. இத்தகைய சடங்குகளே இனக்குலச் சமூகத்தை இயக்கின. இயற்கை விளைவுகளால் நன்மை ஏற்படும்பொழுது மகிழ்ச்சியடைந்த மனிதன் அதற்கு நன்றி செலுத்தும் பொருட்டும், பாதிப்பு அடையும்போது இயற்கையைத் திருப்திப்படுத்தும் வகையிலும், நம்பிக்கை அடிப்படையில் சில சடங்குகளை மேற்கொண்டான். மனிதனால் குறியீட்டு நிலையில் நிகழ்த்தப்பட்ட இத்தகைய சடங்குகள் திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்பட்டு நிலைத்த வடிவம் பெற்று தொடர் செயற்பாட்டிற்குரிய ஒன்றாக விளங்கின.

சடங்குகள் பல்வேறு நோக்கங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குடும்பம் தழைக்க, நோயின்றி வாழ, வழி பாவங்களைப் போக்க, துன்ப துயரங்கள் விலக, உறவுகள் நீடிக்க, எதிரிகளைத் தண்டிக்க, இயற்கையை வசப்படுத்த, விஞ்சிய ஆற்றலைப் பெற என்றவாறு பல்வேறு வகையான நோக்கங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களை முன்னிட்டுச் முழுக்க முழுக்க மக்களின் நம்பிக்கையுடன் கூட்டாக மேற்கொள்ளப்படுகின்றன.

சடங்குகளின் தன்மை பன்முகம் கொண்டது. சடங்குகளின் சிறப்புக் கூறு அவை செயல் வடிவம் கொண்டவை என்பதுதான். நம்பிக்கை என்பது மனிதனின் உணர்வு நிலையோடு இருக்க, சடங்குகள் செயல் வடிவில் நிகழ்த்தப்படுவதாகும். ஒன்றைச் செய்து மற்றொன்றைப் பெறுவது சடங்குகளின் நோக்கமாக இருப்பதனால், நிகழ்த்துதல் என்பது இதன் அடிப்படைக் கூறாக அமைகின்றது. பெரும்பாலான சடங்குகள் குறிப்பிட்ட கால இடைவெளியில் திரும்பத் திரும்ப நிகழ்த்தப்படுகின்றன. சடங்குகளின் மற்றொரு சிறப்புக் கூறு பலரின் கூட்டு முயற்சியால் அவை நிகழ்த்தப்படுவதாகும். சில சூழல்களில் தனி மனிதரால் நிகழ்த்தப்பட்டாலும் பெரும்பாலானவை கூட்டுத்தன்மை உடையனவாக,

சமூகம் சார்ந்தனவாகவே நிகழ்த்தப்படுகின்றன. ஏனெனில், சடங்கு நிகழ்வு என்பது சடங்கு செய்வோர், சடங்கில் பங்கேற்போர், பார்வையாளர் ஆகியோருடைய நடத்தை முறைகளின் தொகுப்பாகும்.

மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை, ஏன்? இறந்த பின்பும் கூடப் பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப்படுவதை எம்மால் அறியக் கூடியதாக உள்ளது. இவ்வாறு மக்களால் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சடங்குகளின் பின்னணியிலும் ஏதேனும் ஒரு காரணம் இருக்கத்தான் செய்கிறது என்பதனை மறுப்பதற்கில்லை. சடங்குகளை வகைப்படுத்தி விளக்குவதன் வாயிலாக எந்தெந்தச் சடங்குகள் எம்மாதிரியான சூழல்களில் என்னென்ன காரணங்களுக்காக நிகழ்த்தப்படுகின்றன என்பதனை உணர்ந்து கொள்ளலாம். அந்தவகையில் மக்களால் வாழ்க்கை வட்டச் சடங்குகள், வழமைச் சடங்குகள், வழிபாட்டுச் சடங்குகள், மந்திரச் சடங்குகள் போன்ற சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதாவது பிறப்பு முதல் இறப்புவரை மக்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் இடம்பெறும் சடங்குகளும் மக்களின் பண்பாட்டு நிலைகளை பறைசாற்றுவனவாக அமைகின்றன. இவ்வகையில் பக்தி இலக்கியங்களுள் ஒன்றாக திகழும் திருமுறைகளினை அடிப்படையாகக் கொண்டு மக்களது வாழ்வியலில் கடைபிடிக்கப்பட்ட சடங்கு முறைகள் பற்றிக் காண்போம்.

**குழந்தை சடங்குகள்**

குழந்தைக்கும் தாய்க்கும் நோய்கள் ஏற்படாவண்ணம் கருவுற்ற நாள் முதலாகப் பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**தானங்கள் செய்தல்**

குழந்தை பிறந்ததும் அம்மகிழச்சியை கொண்டாடும் வகையில் பல்வேறு தானங்களை செய்வது வழக்கமாகக் காணப்பட்டது.

திருஞானசம்பந்தர் பிறந்ததும் அவரது பெற்றோர்கள் தானம் செய்தமையை

''செம்பொன் பலதான வினைசெய்வார்'' என்ற அடியும்,
சிவநேசர் தமக்கு மகன் பிறந்ததும் அவர் தானங்கள் செய்தமையை ,
''தங்கள் மரபினி லுரிமைச் சடங்கு தசதி னத்திலும்
பொங்கு பெருமகிழ்ச் சியுடன் புரிந்து காப்பினி புனைந்தார்''
எனவரும் சிறுதொண்ட நாயனார் புராணப்பாடல்களும் குழந்தைக்குப் பத்து நாட்கள் சடங்குகள் செய்யப்படுமாற்றைக் காட்டுகின்றன. அவற்றுள் ஒன்று திருமலி நெய்யாட்டல் சடங்கு என்பதும் புலனாகிறது.

**மாதந்தோறும் செய்யும் சடங்குகள்**

''திங்கள்தோறும் முன்செய்யும் அத்திரு வளர் சிறப்பின்
மங்களம் புரிநல்வினை மாட்சியிற் பெறுக
அங்கண் மாநகர் அமைத்திடஆண் டெதிர் அணைந்து
தங்குபே ரொளிச்சீ றடிதளர் நடைபயில''

(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:68)

என்ற திருஞானசம்பந்தர் புராணப்பாடல் மாதங்கள் தோறும் சடங்குகள் நிகழ்த்தப் பெறுகின்றமையைக் காட்டுகிறது.

''காப்பணியும் இளங்குழவிப் பதம்நீங்கி''

(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:68)

எனவரும் மானக்கஞ்சாற நாயனார் புராணப்பாடல் அடி குழந்தைக்கு தீங்குகள் நிகழாத வண்ணம் காப்பணிதலைச் சுட்டுகின்றது,

மேலும், குழந்தையின் நல்வாழ்வை மனத்துட் கொண்டு ஒவ்வொரு நிலைகளிலும் தெய்வங்கட்குப் பெருமடை கொடுக்கும் வழக்கம் உள்ளமையை,

“வருமுறைப் பருவந்தோறும் வளம்மிகு சிறப்பின் தெய்வம்

பெருமடை கொடுத்து……………..”

என்ற கண்ணப்பநாயனார் புராணப்பாடலடிகள் எடுத்துக்காட்டுகின்றன.

**பெயர் சூட்டுதல்**

“கதிர்மணி பிறந்த தென்ன உருத்திரக் கணிகை மாராம்
புதியிலார் குளத்துள் தோன்றிப் பரவையார் என்றும் நாமம்
வதியுளி விளக்கத் தாலே மேதகு சான்றோர் ஆன்ற
மதியதி புனிதன் நன்நாள் மங்கல அணியால் சாத்த”
நாமகரணத்தழகு நாள் பெற நிறுத்தி”
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:68)

என்பனவற்றால் குழந்தைக்குப் பெயர் சூட்ட நல்ல நாளைத் தேர்ந்தெடுப்பர் என்பதும், அந்நாள் இறைவனுக்குகந்த நாளாக அமையும் என்பதும், பெயர் சூட்டுதலுக்கு நாமகரணம் என்ற பெயர் உண்டு என்பதும் புலனாகின்றது.

**பெயர் சூட்டும் மரபு**

இவ்வாறு குழந்தைக்கு பெயர் சூட்டும் போது சில மரபுகள் கடைபிடிக்கப்பட்டன என்பதையும் அறிய முடிகின்றது.

- இறைவனின் திருப்பெயரை குழந்தைக்கு இடுதல்
- உடலின் தன்மைக்கேற்ப பெயரிடுதல்
- பண்பு அல்லது உறுப்புப் பற்றி பெயரிடல்
- பிறந்த நாளுக்கு பொருந்தும் வகையில் பெயரிடல்
- தம் தந்தையின் பெயரைக் குழந்தைக்கு இடுதல்
- போன்ற முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

காரைக்கால் அம்மையார் தம் கணவன் மற்றொரு மாங்கனியை கேட்டமையினால் இறைவனிடம் வேண்டி, இறைவன் அருளால் ஒரு மாங்கனியைப் பெற்று தன் கணவனிடம் கொடுக்கிறாள். இதையறிந்த அவர் கணவன் அவரைப்பிரிந்து வேறு இடம் சென்று மற்றொரு பெண்ணை மணந்து இல்லறம் புரிகின்றான். அவர்களுக்கு ஒரு குழந்தைப் பிறக்கின்றது. அக்குழந்தைக்கு காரைக்கால் அம்மையார் பெயரை இடுகின்றார். இதனை

“மடமகள் தன்னைப் பெற்று மங்கலம் பேணி தான்முன்பு
உடலுறவு அஞ்சி நீத்த ஒருபெரு மனைவி யாரைத்
தொடர்வற நினைந்து தெய்வத் தொழுகுலம் என்றே கொண்டு
கடனமைத் தவர்தம் நாமம் காதல் செய்மக வைஇட்டான்”

(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:69)

என்ற பாடல் காட்டும்.

கண்ணப்பர் பிறந்ததும் அக்குழந்தையை உறவினர்களும் மற்றலர்களும் கையிலெடுக்கும் போது அக்குழந்தை திண்ணென்றிருந்ததால் திண்ணன் எனப் பெயரிட்டனர் என்பது,

“அண்ணலைக் கையில் ஏந்துதற்கு அருமையால்
ஊரிமைப்பேருந் திண்ணன் என்றியம்பும்”
என்ற அடிகளால் தெரிய வருகின்றது.
“யாவரும்பெரு மகிழ்ச்சியால் இன்புறப் பயந்த
பாவைநல் லுறப்பேணி கிளர்பண்பெ லாம்நோக்கி
பூவினா னெனவரு தலிற்பூம்பா வையென்றெ
மேவும் நாமமும் விளம்பினர் புவியின் மேல் விளங்க”
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:69)

என்ற பாடல் மூலம் சிவநேசரின் மகளுக்கு அவள் அழகு விளங்கும் பண்பின் காரணமாகவும் **பூம்பாவை** என்ற பெயர் இடப்பட்டதை உணரலாம்.

பிறந்த நாளுக்குப் பொருந்தும் வகையில் அந்நாளின் பெயரின் முற்பகுதியைப் பெயருடன் இணைத்து வழங்குதலும் உண்டு. திருவாதிரை நாளில் பிறந்த திருஞானசம்பந்தருக்கு **திரு** என்பதை முதலில் இணைத்து பெயரிட்டுள்ளனர் என்பதை,

“நாம கரணத்தழகு நாள்பெற மகிழ்ச்சி”

(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:70)

என்ற அடியில் காணலாம்.

இவ்வாறு அக்காலத்தில் பெயரிடப்படும் முறைகள் மேற்கூறப்பட்டவாறு அமைந்தன என்பதை அறிய முடிகிறது.

**மூன்றாம் ஆண்டுச் சடங்கு**

சைவச் சடங்குகள் பதினாறு என்றும் அவற்றுள் ஒன்று **மயிர் நீக்கும் சடங்கு** என்றும் கருதப்பெறுகிறது. அக்காலத்தில் குழந்தையின் மூன்றாம் ஆண்டில் இச்சடங்கு நடத்தப்பட்டது. இது **மயிர் வினை மங்கலம்** என்றும், **மயிர் நீக்கு மணவினை** என்றும் அழைக்கப்பட்டது. இச்சடங்கை,

“வந்து வளர்மூ வாண்டில் மயிர்வினை மங்கலம் செய்து”

(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:70)

என்ற சிறுதொண்ட நாயனார் புராணப்பாடல் அடியாலும் அறிய முடிகின்றது.

**ஏழாம் ஆண்டுச் சடங்கு**

அந்தணர்கள் தம் குழந்தையின் ஏழாமாண்டுப் பருவத்தில் உபநயனச் சடங்கு செய்வதை,

“நிகழும் முறைமை ஆண்டேழும் நிரம்பும் பருவம் வந்தெய்தப்

புகழும் பெருமை உபநயனப் பொருவில் சடங்கு முடித்து..” (ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:70)

என்ற சண்டேஸ்வர நாயனார் புராணப் பாடல் அடிகள் காட்டுகின்றன.

தக்கப் பருவம் வந்துற்றதும் அந்தணர்கள் தம் குழந்தைக்குப் பூநூல் அணிவிப்பதைத் தடுத்தாட்கொண்ட புராணத்தில் இடம்பெறும்,

“பெருமைசால் அரசர் காதல் பிள்ளையாய்ப் பின்னும் தங்கள்
வருமுறை மரபில் வைகி வளர்ந்து மங்கலஞ் செய்கோலத்
தருமுறை முந்ல் சாத்தி அளவில் தொல்கலை கள்ஆய்ந்து
திருமலி சிறப்பின் ஓங்கிச் சீர்மணப் பருவம் சேர்ந்தார்”
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:71)

என்ற பாடல் காட்டுகிறது.

இவ்வாறு குழந்தைச் சடங்குகள் பலவாறு மேற்கொள்ளப் பெருவதை அறிய முடிகிறது.

**திருமணம் தொடர்பான சடங்குகள்**

இல்லற வாழ்வைத் தொடங்குவதற்கு அடிப்படையான திருமணத்தின் போதும் பல்வேறு சடங்குகள் மேற்கொள்ளப்படகின்றன.

**மணநாளைக் குறித்தல்**

திருமணம் செய்விப்பதற்கு ஏற்ற நாளைக் குறிக்கும் வழக்கம் காணப்பட்டது. ஏயர்கோல் கலிக்காமருக்கும் மானக்கஞ்சாறனார் மகளுக்கும் மணம் முடிக்க ஏற்ற மங்கள நாளைச் சோதிடம் வல்லார் வகுத்துக் கூறியமையை

“சென்ற வருக்கஞ் சாறார் மணம்இ சைந்தபடி செப்பக்
குன்றா னையபூயத் தேயர் கோனா ரும்மிக விரும்பி
நின்ற நிலைமையின் இரண்டு திறத்தார்க் கும்நேர் வாய
மன்றல் வினைமங் கலநாள் மதில் வல்லவர் வகுத்தார்”
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:71)

என்ற பாடல் உணர்த்துகிறது.

**முளைச் சார்த்தல்**

திருமணம் செய்விப்பதற்கு ஏற்ற நாளைத் தேர்ந்தெடுத்த பின்னர் ஒரு நல்ல நாளில் முளைச்சார்த்தல் என்ற சடங்கு மேற்கொள்ளப்பட்டது. இதனை,

“மங்கலமாஞ் செயல்விரும்பி மகட்பயந்த வள்ளலார்
தங்குலநீள் சுற்றமெலாம் தயங்குபெருங் களிசிறப்பப்
பொங்கியவென் முளைப்பெய்து பொலங்கலங்க ளிடைநெருங்க
கொங்கலர்தண் பொழில் மூர் வதுவைமுகங் கோடித்தார்”
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:72)

என்ற மானக்கஞ்சாறா நாயனார் புராணப் பாடலாலும்,

"மகிழ்ச்சியால் மனம் மீக்கூறி மங்கல வினைகள் எல்லாம்
புகழ்ச்சியால் பொலிந்து தோன்றப் போற்றிய தொழிலா ஆகி
இகழ்ச்சி ஒன்றாலும் இன்றி ஏந்து பூமாலைப் பந்தர்
நிகழ்ச்சியில் மைந்தர் ஈண்டி நீள்முலைச் சாத்தி னார்கள்"
என்ற தடுத்தாட் கொண்ட புராணப் பாடலாலும்,

"திருமணம் செய்கலி யாணத் திருநா ளும்திகழ் சிறப்பின்
மருவிய ஓரையும் கணித மங்கலவர் வகுப்பப்
பெருகு மணநா ளோலை பெருஞ்சிறப் பினுடன் போக்கி
அருள்புரிந்த நன்நாளில் அணிமுளைப் பாலிகை விதைத்தார்"
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:72)

என்ற திருஞானசம்பந்தர் புராணப்பாடலாலும் அறியலாம்.

**மண ஓலை அனுப்புதல்**

மணநாள் முடிவுசெய்யப்பட்டதும் மண ஓலை தயாரித்து அதைப் பெரியோர்கள் மணமகள் வீட்டாருக்கு அனுப்பி வைப்பர். இதனை மண ஓலை என்பர். ஆருராரின் தந்தை சடங்கவி இசைவு தெரிவித்ததும் மணமகளின் வீட்டாருக்கு மண ஓலை அனுப்புகின்றார். மணமகன் வீட்டு ஆடவரும், மங்கலப் பெண்டிரும் மணநாள் குறித்த ஓலையை மணமகள் வீட்டிற்குக் கொண்டு சென்றனர். அப்போது அவர்களை வரவேற்று மணவோலையைப் பணிவுடன் ஏற்றுக் கொள்கின்றனர். இவை,

"மற்றவன் இசைந்த வார்த்தை கேட்டவர் வள்ளல் தன்னைப்

பெற்றவர் தம்பால் சென்று சொன்னபின் பெருகு சிந்தை
உற்றதோர் மகிழ்ச்சி எய்தி மணவினை உவந்து சாற்றக்
கொற்றவர் திருவுக் கேற்பக் குறித்து நாள்ஓலை விட்டார்"
"மங்கலம் பொலியச் செய்த மனவிணை ஓலை ஏந்தி
அங்கயல் கண்ணி னாரும் ஆடவர் பலரும் ஈண்டிக்
கொங்கலர் சோலை மூர் குறுகினார் எதிரே வந்து
பங்கய வதனி மாரும் மைந்தரும் பணிந்து கொண்டார்"
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:72)

எனக் காட்டப்படுகின்றன.

**திருக்காப்பு அணிதல்**

திருமணத்திற்கு முந்தைய நாளில் மணமக்களுக்கு தீங்குகள் நிகழா வண்ணம் காப்புக் கட்டும் சடங்கு நிகழ்த்தப் பெற்றது. சம்பந்தரின் திருமணத்திற்கு முன்னைய நாளில் மறையவர்களும், ஆடவர்களும், பெண்டிரும் கூடி வாழ்த்திப் பொற்காப்பு அணிவித்தனர்.

**காப்பு அணிவிக்கும் சடங்கு**

"மணவினைக் கமைந்த செய்கை மாதினைப் பயந்தோர் செய்யத்
துணைமலர்க் கோதை தாமச் சுரும்பனை தோளி னானைப்
புணர்மணத் திருநாள் முன்னால் பொருந்திய விதி யினாலே

பணைமுர சியம்ப வாழ்த்திப் பைம்பொன் நாண்காப்புச் சேர்ந்தார்''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:73)

எனக் காட்டப்படுகிறது.

**மணமகனுக்கு கோலம் அணிவித்தல்**

திருமணத்திற்கு முன்னர் திருமஞ்சன நீராட்டுதல், வெண்பட்டாடை சார்த்தல், திருவுத்திரியம் சார்த்தல், மணப்பொருட்கள் பூசுதல், அணிகலண்கள் அணிவித்தல், மலர்மாலைகள் அணிவித்தல், பொன் அரியாசனத்தில் அமர்த்துதல், பச்சைக் கருப்பூரம், சுண்ணம், அழகிய பூக்களாலான குளிர்ந்த பனிநீர் கூட்டிச்செய்த சந்தனக் குழம்பைப் பூசுதல், விதிப்படி மார்பில் பூநூல் சார்த்துதல், தருப்பையை கைவிரலில் அணிவித்தல் ஆகியன நிகழ்த்தப் பெற்றன என்பதை,

''வாசநெய் யூட்டி மிக்க மலர்விரை அடுத்து நீர்ப்
பாசனத் தமைத்த பாங்கர் படுமணிப் பைம்பொன் தின்கால்
ஆசனத் தனிநீர் ஆட்டி அரிசனஞ் சாத்தி அன்பால்
ஈசனுக் கீயான் மேனி எழில்பெற விளக்கி னார்கள்
அகில்விரைத் ப மேய்ந்த அணிகொள் பட்டாடை சாத்தி
முகில்நுழை மதியம் போலக் கைவலான் முன்கைசூழ்ந்த
துகில்கொடு குஞ்சி ஈரம் புலர்த்தித்தன் ய செங்கை
உகிர்நுதி முறையில் போக்கி ஒளிர்நறுஞ் சிகளி ஆர்த்தான்.''

''நறும் பசுங்கர்ப் பூரஞ் சுண்ணத்தால் வண்ணப் போதில்
ஆனதன் பளிநீர் கூட்டி அமைத்த சந்தனச் சேறாட்டி
மான்மதச் சாந்து தோய்ந்த மங்கலக் கலவை சாத்திப்
பால்மறை முந்ல் மின்னப் பவித்திரஞ் சிறந்த கையான்''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:73)

என்ற பாடல்கள் மூலம் அறியலாம்.

**உறவினர்களுக்கு பொருள் கொண்டு வருதல்**

திருமணத்திற்கு வரும் உறவினர்கள் பல்வேறு பொருட்களை கொண்டு வருவது,

''என்டிசை யினுள்ளோரும் ஈண்டு வளத்தொரு நெருங்கப்
பண்ட நிரைசா லைகளும் பல்வே றுவிதம் பயில
மண்டு பெருநிதிக் குவைகள் மலைப்பிறங் கல்என் மலிய''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:74)

என்ற திருஞானசம்பந்தர் புராணப்பாடல் அடிகளாலும்,

மணம் முடிந்த பின் தானம் வழங்குவது,

''மனந்தன ரும்இடர் நீங்கி வானவர் நாயகர் அருளால்
புனைந்த மலர்க்குழல் பெற்ற பூங்கொடி யைமணம் புணர்ந்து
தனம்பொ ழில்துபெரு வதுவை உலகே லாம்தலை சிறப்ப

இனம்பெரு கத்தம் முடைய எயின்மூ யர்சென் றணைந்தார்''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:74)

என்ற மானக்கஞ்சாறா நாயனார் புராணப் பாடலாலும் காட்டப்படுகின்றன.

**தாரை வார்த்தல்**

திருஞானசம்பந்தரின் திருமண நிகழ்ச்சியின் போது மணமகளின் தந்தை மணமகனுக்கு தன் மகளைக் கொடுப்பதாகத் தாரை வார்த்துக் கொடுத்தல் திருமுறையில்,

''பெருகொளி ஞானம் உண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னில்
மருவுமங் கலநீர் வாசக் கரக முன்னேந்தி வார்ப்பார்
தருமறை கோத்தி ரத்தின் தங்குலஞ் செப்பி என்றன்
அருநிதிப் பாவை யாரைப் பிள்ளையார் களித்தேன் என்றார்''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:74)

எனக் காட்டப்படுகிறது.

**மங்கல நாண் அணிவித்தல்**

இசைக்கருவிகள் முழங்க மங்கல நாளில் பொன்னாலாகிய தாலியை மணமகன் மணமகள் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் காணப்பட்டது. இத் தாலியை **மங்கல நாண்** என்றும், **பொற்காப்பு** என்றும் அழைத்தனர். மங்கல நாணைப் பூட்டிய பின்னர் மணமகளை இல்லறத் துணையாக ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாக மணமகன் மணமகளின் கையைப் பற்றுதலைப் **பாணிக்கிரகணம்** என்றழைத்தனர். மங்கல நாண் அணிவித்த பின்னர் எரிவலம் வரும் வழக்கமும் காணப்பட்டது. இவை,

''மறையொலி பொங்கி யோங்க மங்கல வாழ்த்து மல்க
நிறைவளச் செங்கை பற்ற நேரிழை யவர்முன் அந்தப்
பொறையணி முந்யல் மார்பர் புகரில் வெண்பொரிகை அட்டி
இறைவரை ஏத்தும் வேலை எரிவலம் கொள்ள வேண்டி
மந்திர முறையால் உய்த்த எரிவல மாக மாதர்
தம்திருக் கையை பற்றுந் தாமரைச் செங்கையாளர்'' (ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:75)
எனக் காட்டப்படுகின்றன.

திருமணமான பெண்கள் தாலி அணிந்திருப்பர் என்பது,

''யாதென்றும் இல்லை யாகி இருபகல் உணவு மாறிப்
பேதுறும் மைந்த ரோடும் பெருகு சுற்றத்தை நோக்கிக்
காதல் செய்மனைவி யார்தங் கணவனார் கலய னார்க்கைக்
கோதில் தாலி கொடுத்து நெற்கொள்ளும் என்றார்''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:75)

என்ற குங்கிலியக் கலயநாயனார் புராணப் பாடல் மூலம் புலனாகின்றது.

**இறப்புச் சடங்குகள்**

குழந்தைச் சடங்குகளைப் போன்று இறப்புச் சடங்குகளும் சமுதாயத்தில் இன்றியமையாது இடம்பெற்றுப் பண்பாட்டை பறைசாற்றுவனவாய் அமைகின்றன. இவ்வகையில் திருமுறைகளிலும் இறப்புச் சடங்குகள் பற்றிய செய்திகள் இடம்பெறுவதைக் காணலாம்.

ஒருவர் இறந்ததும் அவருடைய உறவினர்கள் பிரிவை நினைந்து ஒப்பாரி வைத்து அழுதலையும் சுடுகாட்டிற்குச் சென்று எரியூட்டிவிட்டு நீரில் மூழ்கி வருவர் என்பதையும் பின்வரும் திருமந்திரப் பாடல் காட்டுகின்றது.

''ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுசட
சூரையங் காட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:76)

சுற்றத்தினரும், உரிய பெண்டும், ஏனைய மக்களும் ஊர்ப் பொதுவாகிய வாய்க்காலில் சென்று சடங்குகள் செய்து, தூய்மையான நீரைக் கொண்டு வந்து நீராட்டுவதை,

''ஆர்த்தெழு சுற்றமும் பெண்டிரும் மக்களும்
ஊர்த்துறைக் காலே ஒழிவர் ஒழிந்தபின்
வேர்த்தலைப் போக்கி விறகிட் டெறிமூட்டி
நீர்த்தலை மூழ்குவர் நீதியில் லோரே'' டன் நெறியில் நிற்பார்''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:76)

என்ற பாடலால் அதனை அறியலாம்.

இறைவன் உறையும் திருக்கோயில்கள் அனைத்திலும் மறைவிதிப்படி நாள் வழிபாடுகளையும் சிறப்பு வழிபாடுகளையும் முட்டாது செய்ய வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் உலகில் எண்ணற்ற கொடிய நோய்கள் உருவாகும். வேண்டும் காலத்தில் மழை பெய்யாது பொய்க்கும். மன்னன் மானமும் மறமும் இழந்து அழிவான் என்றநம்பிக்கையைத் திருமூலர் தம் திருமந்திரத்தில் வெளிப்படுத்துகின்றார். குழந்தை வரம் வேண்டி இறைவனுக்கு காணிக்கை செலுத்தும் வழக்கம் நிலவியமையையும் இதன் மூலம் அறிய முடிகிறது. நாகனின் மனைவி இவ்வாறு குழந்தை வரம் வேண்டிக் காணிக்கை செலுத்தியமையை,

''வாரணச் சேவ லோடும் வரிமயிற் குலங்கள் விட்டுத்
தோரண மணிகள்ஆ்கிச் சாரும் பனிகதம் பம்நாற்றிப்
பேரணி நெடுவே லோற்குப் புகழ்புரி குரவை அங்க
பேரணங் காடல் செய்து பெருவிழா எடுத்த பின்றை''
(ஈஸ்வரப்பிள்ளை, தா., (2008), ப:76)

என்ற பாடல் உணர்த்துகிறது.

**முடிவுரை**

பண்டைய காலந்தொடக்கம் தற்காலம் வரை மக்கள் இறை வழிபாட்டினை மேற்கொள்கின்றமை அனைவராலும் அறியத்தக்க விடயமாகும். அந்தவகையில் சங்க இலக்கியங்களின் மூலம் மக்கள் வாழ்வில் போர், வீரம், காதல் ஆகியன மட்டும் அன்றிச் சமயமும் இன்றியமையாத இடம் வகித்திருந்ததை அறிய முடிகின்றதோடு சமய உணர்வானது மக்கள் மனத்தில் படர்ந்து காணப்பெற்ற நிலையை

காணமுடிகின்றது. சங்க இலக்கியங்களில் ஒன்றாகக் கருதப்படும் பரிபாடலில் திருமால் குறித்து ஆறு பாடல்களும் முருகன் குறித்த எட்டு பாடல்களும் இடம்பெற்றுள்ளன. திருமுருகாற்றுப்படை முழுக்க முழுக்க இறைவன் பற்றியதாகவும் இறை உணர்வை வெளிப்படுத்துகின்ற வகையிலும் அமைந்து காணப்படுகின்றது. அத்துடன் சங்ககால மக்கள் இறைவனுக்கு கோயில்கள் எழுப்பி வழிபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இது போன்று பிற்பட்ட காலங்களில் தோற்றம் பெற்ற இலக்கியங்களிலும் சமயம், இறை வழிபாடு, பக்தி போன்ற விடயங்கள் இன்றியமையாதனவாக அமைந்தன.

இயற்கையிறந்த சக்திகளை வழிபடுவதாலும் அச்சக்திகளை வேண்டுவதாலும் அவற்றிற்குப் பலி இடுவதாலும் தாம் வேண்டியவற்றினை அடையலாம் என்ற நம்பிக்கை தொன்மைக்காலச் சமுதாயத்தில் நிலவியுள்ளது. உலகைக் காத்தும் படைத்தும் அருள்பவன் இறைவன். இறைவழிபாடுகளால் மறுமை உலகம் கிட்டும். விளைச்சலின் முதற்பகுதியை இறைவனுக்கு அளித்தால் நல்ல பலன்கள் கிடைக்கும். எச்செயலையும் இறைவனை எண்ணிச் செய்ய வேண்டும் முதலான நம்பிக்கைகள் அக்காலச் சமுதாயத்தில் இடம் பெற்றுள்ளன.

உலக இன்பங்களின் நிலையாமையை எடுத்துரைத்து அறம் வலியுறுத்தப்பட்ட காலப்பின்னனியில் நாம் எமது வாழ்க்கையில் விதிக்கப்பட்டிருக்கும் சடங்கு முறைகளைப் பின்பற்றி அவற்றினை செவ்வனே செய்வதன் மூலமாக வீடுபேற்றினை அடையலாம் என நாயன்மார்கள் வழிப்படுத்தியுள்ளர். ஆத்துடன் இச் சடங்குகளை நம் வாழ்வில் கடைபிடிப்பதன் மூலம் ஆத்ம திருப்தியினையும் எமது பாரம்பரிய பண்பாட்டு மரபுகளையும் எமக்குப் பின்னுள்ள சந்ததியினருக்கும் வழங்க முடியும். இவற்றினை வெறுமனே சடங்கு முறைகள் எனக் கொள்ளாது அறிவியல் ரீதியாகவும் நாம் பின்பற்ற வேண்டிய நியதிகள் எனவும் கொள்ளத்தக்கது சிறப்பு. ஒருவன் பிறக்கும் முன்னரே சடங்குகள் அவனுடன் பின்னிப்பினைந்ததாக காணப்படுகின்றது. பெரியபுராணத்தில் வாழ்வியல் சடங்கு முறைகள் பற்றிய சிந்தனைகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமையினை எம்மால் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.

**உசாத்துணைகள்**

இரத்தின சபாபதி, வை. (1978). சமய இலக்கியங்கள். சென்னை. இந்தியா புக் ஹவுஸ்.

ஈஸ்வரப்பிள்ளை, தா. (2008). பண்பாட்டு நோக்கில் திருமுறைகள். சென்னை. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்.

கந்தசாமி, சோ. ந. (1976). தழிழும் தத்துவமும். சிதம்பரம். மணிவாசகர் நூலகம்.

குன்றக்குடி அடிகள். (1975). நமது நிலையில் சமயச் சமுதாயம். சென்னை. சென்னைப் பல்கலைக்கழகம்.

தட்சணாமூர்த்தி, அ. (1976). தமிழர் நாகரிகமும் பண்பாடும். சென்னை. சென்னைப் பல்கலைக்கழகம்.

திருவாவடுதுறை ஆதினம். (1987). திருமந்திரம். திருவாவடுதுறை.

திருவாவடுதுறை ஆதினம். (1988). பெரிய புராணம். திருவாவடுதுறை.

வெள்ளைவாரணன், க. (1984). சங்க இலக்கியத்தில் சமய நோக்கு. தஞ்சாவூர். தமிழ்ப் பல்கலைக்கழகம்.

ஞானசம்பந்தன், அ., ச. (1999). பெரியபுராணம் ஓர் ஆய்வு நூலின் அட்டைப்படம். கங்கை புத்தக நிலையம்.

ஸ்ரீராமகிருஷ்ண தபோவனம். (1970). திருவாசகம். திருச்சி.